# தேடல்

(கவிதைத் தொகுப்பு)



ரமேஷ் வவுனியன்

இந்த இனிய
புத்தகத்தை தங்களுக்கு
அன்பளிப்பாக வழங்குபவர்கள்

**கொழும்பு வாழ்**
**நாடார் நல சங்கம்**

மற்றும்

**STR பிலிம்ஸ்**

கொழும்பு, யாழ்ப்பாணம்

# தேடல்

## (கவிதைத் தொகுப்பு)



ஆசிரியர் :

**ரமேஷ் வவுனியன்**


மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4342926

தொலைநகல் : 044-4346082

மின் அஞ்சல் : Manimekalai @ eth.net

## நூல் விவரம்



| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ தேடல் |
| ஆசிரியர் | ➢ ரமேஷ் வவுனியன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 76 |
| நூலின் விலை | ➢ ரூ. 16.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. *சாய்* |
| லேசர் வடிவமைப்பு | ➢ *கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர்,* சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ *ஸ்கிரிப்ட் ஆப்செட்,* சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |

## உள்ளே...


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | உறவுப் பிச்சை தாருங்கள் | 15 |
| 2. | நான் மனநோயாளியா? | 18 |
| 3. | நடைப்பிணம் | 21 |
| 4. | முகவரி மாற்றும் சில வரிகள் | 24 |
| 5. | இவனும் ஓர் ஈழத்தமிழன்தான் | 27 |
| 6. | தமிழ் அன்னை வேண்டும் | 30 |
| 7. | கண்ணே எனை மறந்து விடியலுக்கு வித்தாகு.. | 33 |
| 8. | வேண்டவே வேண்டாம் | 37 |
| 9. | அகதி | 40 |
| 10. | சொர்க்கபூமி | 41 |
| 11. | சீ... இதுவா உன் இலட்சியம் | 43 |
| 12. | எதை எழுதுவது? | 47 |
| 13. | நான் கண்ட ஐரோப்பியத் தமிழச்சி | 50 |
| 14. | அவளிடமிருந்து ஒரு கடிதம் | 52 |
| 15. | என் ஆசிய முல்லையே | 56 |
| 16. | வெற்றிடம் நிரப்புக | 58 |
| 17. | சீ...தண(ல்)க் கோடரியா...? | 60 |
| 18. | அக்கினி சாட்சி | 61 |
| 19. | எப்ப அனுப்பிறியள் | 62 |
| 20. | தேய்பிறை | 64 |
| 21. | விடுதலை வேண்டும் | 65 |
| 22. | இதயமற்றவனின் அலறல் | 66 |
| 23. | மௌனம் சம்மதமா.? | 69 |
| 24. | தமிழ்க் கலாச்சாரத்தை தாரைவார்த்து விடாதே... | 71 |
| 25. | அற்புத றொபோ | 73 |
| 26. | சிகரட் தேவதை | 74 |

# இது ஒரு புதிய பிரசவம்

முட்டி மோதி தன்னையே தனக்குள் தேடிக் கண்டுகொள்ளும்போது ஏற்படும் அவஸ்தையே இந்தத் தேடல் படைப்புகள் ஒவ்வொன்றிலும் உணரக்கூடியதாக உள்ளது.

ஒரு பயிரைப் பிடுங்கி வேறிடம் ஒன்றில் நடும்போது அப்பயிர் தளிர்விடத் துடிக்கும் அவஸ்தை பெரியது. இதே நிலைதான் ஈழத்தமிழனுக்குப் புலம்பெயர் வாழ்வில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

புதிய தேசம், புதிய மனிதர், புதிய மொழி, புதிய சூழல் இவற்றை தனக்கு இசைய வைத்து அல்லது இவற்றில் தான் இசைந்துபோய் அவன் வாழ்வை நிச்சயிக்கத் துடிக்கும் துடிப்பு மிகக் கொடுமையானது.

இப்புலம் பெயர் வாழ்வை தம் படைப்புகளில் மிக இயல்பாக யதார்த்தமாக ரமேஷ் வவுனியன் பதிவு செய்துள்ளார்.

தான் பிறந்த சொந்த மண்ணில் தன் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் புதிய தேசம் ஒன்றில் புலம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டு தன் பழைய வாழ்வையும், தன்னோடு பழகிய மனிதர்களையும், தான் சுவாசித்த காற்றையும், தான் ரசித்த மரங்களையும் ஞாபகித்துக்

கொண்டிருப்பது மிக வேதனையானது. ஒவ்வொரு படைப்பிலும் இதனைத் தரிசிக்கக் கூடியதாக உள்ளது.

*ரமேஷ் வவுனியன் படைப்புகள் ஒவ்வொன்றிலும் செய்நேர்த்தி மிக அருமை, வார்த்தையைக் கையாளும் இலாவகம் மிக அற்புதம்.*

*தன் ஒவ்வொரு எழுத்திலும் சொந்த மண்ணின் வாசத்தைப் பரவ வைத்துள்ளார். வன்னி மண் பல சிறந்த படைப்பாளிகளைப் பிரசவித்திருக்கிறது.* எழுத வந்தவர்கள் தொடர்ச்சியாக எழுதாவிடினும் தமது கொஞ்சப் படைப்பைக்கூட மிகக் காத்திரமாகவே காத்திருக்கிறார்கள்.

சிறுகதை, கவிதை, நாடகம், நாவல் போன்ற எல்லா கலை இலக்கிய வடிவங்களும் வன்னியில் நீண்டகாலமாகவே படைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படைப்புகளில் மெய்யான வாழ்வியல் யதார்த்தங்களே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

*இந்த வகையில் ரமேஷ் வவுனியனும் வன்னி மண்ணுக்குக் கிடைத்த சிறந்த படைப்பாளி என்றே அவரின் படைப்புகள் சொல்கின்றன.*

ரமேஷ் வவுனியன் இன்னும் நிறைய எழுதவேண்டும் என்பது என் விருப்பம், இதை ரமேஷ் வவுனியன் செய்வார் என்பது எனது நம்பிக்கை.

அன்புடன்,

***வவுனியா-திலீபன்.***

# என்னுரை

என் இதயத்திலிருந்து...

இனிய இதயங்களுக்கு வணக்கம்.

என் நாட்குறிப்பில் இருந்த சில குறிப்புகள் புலம்பெயர்ந்த பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. அந்த வகையில் ஜேர்மனியில் இருந்து வெளிவரும் 'இளைஞன்' சஞ்சிகையில் 'தேடல்' எனும் தலைப்பில் தொடர்ந்து வெளியான எனது பதிவுகளுடன் பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் 'ஈழநாடு', கனடாவிலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை மற்றும் ஐரோப்பிய வானொலிகளில் ஒலிபரப்பாகிய எனது தேடல் கவிதைகளின் தொகுப்பே இந்நூலாகிறது.

தயவு செய்து 'தேடலை' கவிதையாகவோ, இலக்கியமாகவோ பார்க்காதீர்கள். ஈழதேச இன்னல்களால் பதினேழு வயதில் புலம்பெயர்ந்து தனிமைச்சிறையில் சிக்கி உயிரறுந்துபோன ஓர் இளைஞனின் இதயத்தில் இருந்து பிரசவித்த குழந்தைகளாகப் பாருங்கள்.

இத்தேடல் தொகுப்பில் பதிவாகியுள்ள அனைத்தும் புலம்பெயர் தேசங்களில் சிதறிக்கிடக்கும் தமிழ்

இளைஞர்களின் இதயச்சுமைகள்... அனுபவிப்புகள்... தேடல்கள்...

இத்தொகுதியில் பதிவாகியுள்ள பல தேடல்கள் 1989ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டவையே!

கடந்த ஐந்து வருடங்களாய் உறங்கு நிலையில் இருக்கும் என் எழுதுகோலை உசுப்பிவிடும் பொறுப்பை உங்களிடமே விடுவிக்கிறேன்.

அன்புடன்,
***ரமேஷ் வவுனியன்***
05.09.2000

**Ramesh Vavuniyan,**
**Bahnhof str-04,**
**55743 Idar Oberstein,**
**Germany**
**Email-vavuniyan@web.de**

# நன்றி...

இளைஞன் (யேர்மனி)
**www.ilaignan.com**

ஈழநாடு (பிரான்ஸ்)

உதயன் (கனடா)

பயணம் (யேர்மனி)



# நேசமுடன்...

நண்பன் ரமேஷ் வவுனியனின் தேடல் ஒரு காலத்தின் முத்திரை. இடம்பெயர்ந்த ஒவ்வோர் தமிழனின் இதயத்திலும் படர்ந்து கிடக்கும் பாசங்களும் சோகங்களும் இவன் எழுத்துக்கள் மூலம் உயிர்ரித்துக்கொள்கின்றன.

'ஐரோப்பா பெயரளவில்
பெரியதுதான்
காரும் வீடும் கம்ப்யூட்டர்
வாழ்க்கையும்தான்
மனசு மட்டும் தெருவோரச் சாக்கடையில்
தத்தளிக்கிறது

என உள்ளதை உள்ளபடி உயிரோட்டமாக உணர்த்தி நிற்கும் இவனது கவிகள் ஒரு காலத்தின் கண்ணாடி. என்றும் வாழும் இவன் கவிகள்.

***தனேஷ் கோபாலபிள்ளை,***
பொறியியல் பீடம்,
குயீன்ஸ் பல்கலைக்கழகம்,
கனடா.

# நேசமுடன்...

“நாமெல்லாம் படைக்கப்பிறந்தவர்கள்...

தேடல்
என்பதுடன் - மனம்
கூடல் கொண்டதால் நாடல் கண்ட
நடைமுறைகளின் வெளிப்பாடும், நாளைக்காலமும்
நறுக்கென நினைவுகளில் வீழும்
சுருக்குகள் முடிச்சவிழ்வதில்
முன்நிற்கும் - ரமேஷ் வவுனியனின்
எண்ணத்துக் கருக்களில்
கருக்கட்டியவை, மொத்தமும்
கைதவழ்ந்திட, கை வருவதில்
கண்தொட்டு, கை அணைத்து
மனம் மகிழ்ந்திட மகிழ்வு.”

தேடல்
வீட்டின் எங்கேயோ ஒரு மூலையில்
கூட்டில் குடிகொள்ளும்
உணர்வின் ஓசைகளும்
உலகின் எல்லையிலும்

எல்லைவிட்டு எங்கும் போகும்
கற்பனையில் கடுகளவும்
எங்கும் ஏங்கும் மனித நேயத்தின் மன அதிர்வுகளும்
எல்லாவற்றையும் தாண்டி
அடி ஆழத்திலும்
தூரத்தே தெரியும் கிட்டத்து நிகழ்வுகளே....!
உருவம் பெறும் வளமான தேடல்
வயது பெறுவதையிட்டு
தேடல், தேடலில் தேடும்
தேடலுடன்,
வாழ்த்தும் வாழ்த்துக்கள்...

'பிறந்துவிட்டால் படைத்துவிடு
இறந்து விட்டாலும் பிறந்துவிடு.'

நேசமுடன்
***தமிழ்தாசன்,***
லண்டன்.

# நேசமுடன்...

தேடல்கள் இல்லாத வாழ்வா...?

எது கிடைத்தாலும் திருப்திப்படாமல் இன்னும் இன்னும்... என்று தேடல்களே வாழ்க்கையாகிப்போன எம்மனங்களுக்கு மத்தியில், ரமேஷ் வவுனியனின் தேடல்கள் வித்தியாசமாக யதார்த்தமாக எம்மைத் தம்பால் ஈர்க்கின்றன. காலத்தைப் பதிவுசெய்து, உணர்ச்சிகளைக் கொட்டி உணர்வு பூர்வமாக எழுதப்பட்ட இக்கவிதைகள் காலத்தால் அழியாது பதிவு செய்து வைத்திருக்க வேண்டியவை...

*சந்திரவதனா செல்வகுமாரன்,*
ஜேர்மனி

## நேசமுடன்...

அமெரிக்க ஐரோப்பிய தேசங்களில் வாழும் தமிழ் நெஞ்சங்களின் தேடல்கள் ரமேஷ் வவுனியனின் இந்த முத்தான கவிதைகளில் நன்கு பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன.

*'எனக்குத் தேவையெல்லாம்*
*உறவு*
*எனும் உயிர்ப்பொருள்தான்..'*

எனும் இவனது வரிகள் தனிமையில் வாடும் ஒவ்வொரு இளைஞரினதும் ஏக்கங்கள். இந்தக்காலத்தின் பதிவுகள் என்றும் நிலைக்கும்

வாழ்க இவன் கவி...

***ரமேஷ் நவரட்ணராசா***
பொறியியலாளர் **(Electrical Engineer)**
**Nortel Network,**
**Canada.**

# நேசமுடன்...

தென்றலின் மென்மையாய்
உன் கவிதையை உணர்ந்தேன்.
தேசத்தின் விடியலை
உன் கவிதையில் அறிந்தேன்
அன்புக்காய் ஏங்கும்
உன் இதயத்தை உணர்ந்தேன்
தேடலெனும் கவிதையில்
உன் முகம் கண்டேன்
உன் எண்ணத் துடிப்பை
உன் கவிதையில் புரிந்தேன்
உன்னத உள்ளம் கொண்ட
எம் வீரரின் கதையையும் படித்தேன்
உன் கவிப்புகள் வான் மட்டும்
வளரவேண்டும் - உன்
கவிதையில் பலர்
நனைந்து மகிழட்டும்.

***சாந்தினி வரதராஜன்***
ஜேர்மனி.

# தேடல்

## உறவுப் பிச்சை தாருங்கள்

கனவொன்று கண்டேன்
அது கவியொன்றைக் கக்கியது
கனவின் சொர்க்கங்கள்
காட்டிய முகவரிக்குரியவ(ர்)ள்
நீயானால்,
என் இதயம் சுரப்பதெல்லாம்
உனக்காகத்தான்

தேசத்தெருக்களில் வீசும்
சோகக்காற்றின் கொடூரத்தால்
பஞ்சாய்ப் பறந்து,
நான் தனிமையாய் விழுந்த இடம்
ஜேர்மனி...

நேசம், உறவு, பாசம்,பந்தம்...
எனும் வார்த்தைகளின்
அர்த்தங்களையே மறந்தவனாய்...
தனிமை எனும்
இரும்புக்கரங்களால் நசுக்கப்பட்டவனாய்...
என் இதய அணுக்களுடன் சங்கமிக்க
எனக்காய்ப் பிறந்தவளைத் தேடியவனாய்
பிறந்த மண்ணின் வாசனையை
நுகரத்துடிக்கும் மானுடனாய் நான்...

ஐரோப்பிய மக்களின் சல்லாப வாழ்க்கை - எனக்கு
நரிகளின் ஊளையிடுதல்களாகவும்,
ஆந்தைகளின் அலறல்களாகவும்..
தொடைக்குமேல் துண்டுகட்டும் தேசமிது..
வெம்பிப் பழுத்த கூட்டம்
உதடுகள் உரசுவதே
இன்பமெனும் தேசமிது...

அன்பும், பாசமும் அன்னியப்பட்டு
உடலின் உறவுகள் மட்டுமே
மேலோங்கும் தேசமிது..
நேற்று... இன்று..நாளை
மரம் விட்டு மரம் தாவும்
மந்திகளாய்...
இதயம் விட்டு
இதயம் தாவும் இளசுகளின் தேசமிது...

ஐரோப்பா
பெயரளவில் பெரியதுதான்

காரும், வீடும், கம்பியூட்டர் வாழ்க்கையும்தான் - ஆனால்
மனசு மட்டும் தெருவோரச் சாக்கடையினுள்
தத்தளிக்கிறது

பகலில் குருடனாய்....
இருட்டில் பார்வையுடையவனாய்....
விரக்தி எனும் ஊர்வலத்தில்
நகரும் சோகத்தேராய்...
நேசத்திற்காய்த் தவிக்கும் மானுடனாய் நான்

தனிமைச் சிறையில் சிக்கி
இருபத்து இரண்டு வயதில்
உயிரறுந்து போகும் எனக்கு
யாராயினும் உறவுப்பிச்சை தாருங்கள்..!
அண்ணனாய்... தம்பியாய்...நண்பனாய்...
நேசத்திற்குரியவனாய்...
என்னை எதுவாயினும்
நினைத்துக் கொள்ளுங்கள்

எனக்குத் தேவையெல்லாம்
உறவு
எனும் உயிர்ப்பொருள்தான்

கிடைக்குமா இல்லையா...?
என் சுவாச அணுக்கள் துடிக்க
செயற்பட வேண்டுமாயின்
உங்கள் பதில்களில்தான்...

# நான் மன நோயாளியா?

நான் யார்?
தாய் மண்ணின் தகனத்தால்
மேற்காவுகை சருகாகி
அன்னியரின் பாதங்களில்
அடைக்கலம் கேட்ட அகதியா?

அல்லது,

ஈழத்தாயின் சேலையில்
'தீ' பரவ...
அதையணைக்க சகோதரர்கள் முயல...
அவர்கள் சாம்பல் காற்றில் கலக்க...
கண்டு காணதவனாய்
அன்னிய மண் தேடிய
அறிவிழந்தவனா?

நான் யார்?

'அண்ணாச்சி, அண்ணாச்சி ஐஸ்பழம் வாங்கித் தா'
என்ற என் தங்கை - இன்று
எனை வெறுத்து
ஈழத்தாயின் மானம் காக்க

இயந்திரத் துப்பாக்கி சுமக்கிறாளாமே!
நான்
கோழை என்பதனால் தானே!?

நான் யார்?

'என் இதயம் துடிப்பதெல்லாம் உனக்காகத்தான்'
என்ற - என் காதலி
உடையின்றி, உணவின்றி, உயிரின்றி
இராணுவ முகாமருகே
உருக்குலைந்து கிடந்தாளாமே!
நான் உணர்ச்சியற்றவன் தானே!?

நான் யார்?

அடிமை விலங்கொடிக்க
வீறு கொண்ட என் தம்பி
தியாகிகள் நினைவாலயத்தில்
'காலவரையறையற்று' துகில்கிறானாமே!
ஆனால் இங்கு - எனக்கு
காலவரையறையற்ற வதிவிட உரிமை
நான் உணர்விழந்தவன் தானே!?

நான் யார்?

அன்னியரிடம்
மூளைச் சலவை பெற்ற முடவனா?

'நான் யார்' என்று
எனக்கே தெரியாத போது...
உணர்வின்றி
உயிர் எழுப்பிய தேடல்கள்
மங்கலாக.. மங்கலாக
விழித்துக் கொள்கிறேன்!

சுற்றியிருந்தவர்களிடம்
சுரண்டிக் கேட்கிறேன்
'நான் யார்?'

ஜேர்மன் வைத்தியரின்
உதடுகள் உச்சரித்தது
'நீ ஒரு மன நோயாளி' என்று.

# நடைப்பிணம்

தாயைக்கண்டும்
தாய் நாட்டைக் காணாத
தவப்புதல்வன் நான்...

நாடின்றி
நாதியற்று - வீதியில்
அலைவதை விட
இறப்பதே மேல் - என
இறப்பதற்காய்
ஏற்ற நாடு தேடி
அகதியாய் நான்...

ஜேர்மனியில் இயலாது;
கிட்லரின் வீழ்ச்சிக்குப்பின்
கிளர்ந்தெழுந்த மானிடம்
ஜப்பானை எட்டிப்பிடிக்க
தொழில் நுட்பத்தில்
புத்துயிர் பெற்றதையிட்டு - நான்
ஆராய வேண்டும்.

இத்தாலியில் இயலாது;
சாய்ந்த கோபுரம்
சிதறாமலிருக்கும்
சிரமத்தை எண்ணி - நான்
சிந்திக்க வேண்டும்.

ரஷ்சியாவில் இயலாது;
அக்ரோபர் புரட்சிக்கு
அத்திவாரமிட்ட
அறிஞர்களின்
ஆத்மாக்களுக்கு - நான்
அஞ்சலி செலுத்திக்கொண்டே
இருக்க வேண்டும்.

அமெரிக்காவில் இயலாது;
ஆதவனின்
அக்கினிப் பிளம்பை
அறிந்து
அருகிலுள்ள
அம்புலியில்
அடியெடுத்து வைத்த
ஆம்ஸ் ரோங்கை சந்தித்து
நான் .
சந்திரனின்
சரித்திரத்தை
சம்பாதிக்க வேண்டும்.

இலங்கையில் இயலாது;
ஈழத்தவரின்

இன்னல் நீங்கி
இன்பமாய் வாழ
இன்னொரு தேசிய கீதம்
இசைப்பதை - நான்
கேட்க வேண்டும்.

இந்தியாவில் இயலாது;
இன்பக் காதலின்
இன்னல்களால்
இன்றும் உலகம்
இட்டு நிரம்ப முடியாத
இருளா - "தாஜ்மகாலை"
இந்தியாவில் உருவாக்கிய
இருபத்து இரண்டாயிரம்
இந்தியர்களையும் - நான்
இனங்காட்ட வேண்டும்.

அப்போ
நான்
எந்த நாட்டில்
இறப்பது?

இல்லை... இல்லை..
மறந்து விட்டேன்
இப்போதே
நான் ஓர்
நடைப் பிணம்தான்!

# முகவரி மாற்றும் சில வரிகள்

அன்பு மகனுக்கு!
உன் கடிதம் கண்டதும்
இதரை வாழையில்
இடி விழுந்தது போல்
இன்பமடைந்தோம்!

ஜேர்மன் "பாஸ்ப்போட்"
இனி உனக்கு
என்றைக்கும் வெள்ளி திசைதான்.

எம்மைப்பற்றி கவலை கொள்ளாதே
பணம் அனுப்புவதற்காய்
உடலை வருத்தாதே
உன் கல்விதான் - எம்
உயிர் மூச்சு

நன்றாக ஓய்வெடு
உடம்பை கவனித்துக்கொள்
"சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம்"

அது போக
கிணத்தடித் தட்டியும் இத்துப்போகுது

அக்காமார் குளிக்க, முழுக
அக்கம் பக்கத்தில்...
ஏனிந்தப் பிரச்சனை!
குளியலறைதான் - என்
யோசனை

மூத்தவளுக்கும்
கலியாணம் பேசி வந்தது.
உன்னை நம்பித்தான்
ஐந்து லட்சத்துக்கு
உடன் பட்டேன்

ஒன்றுக்கும் யோசிக்காதே!
நன்றாய்ப் படி
உடம்பைக் கவனி

இங்கு
எல்லோருடைய வீட்டிலும்
ரீவி, டேக் சகஜம்
எங்களுடைய வீட்டில் இல்லை
எங்களுக்கும் கவலையில்லை
ஆனால் - உனக்கு
கௌரவம் இல்லை

நன்றாகப் படி ராசா
உடம்பை கவனித்துக்கொள்!

முன் வீட்டு
முத்தையரின் மகன்

படித்துக் கொண்டே - இரவில்
வேலை செய்து
புது வீடு கட்டியிருக்கிறான்

நன்றாகப் படி ராசா
உடலை வருத்தாதே!

உன் வசதிக்காய்
ஜேர்மனியில் இருந்து
''உண்டியல்'' மூலம்
பணம் அனுப்புபவரின்
முகவரியையும் அனுப்புகிறேன்

ஓய்வெடு, உடம்பைக்கவனி
நன்றாகப் படி!

# இவனும் ஓர் ஈழத்தமிழன்தான்...

பிறந்த மண்ணின்
துயரத்தை தூக்கியெறிந்து
சுறுசுறுப்புக்கும் பரபரப்புக்கும்
வித்தியாசம் தெரியாத
"ஐரோப்பிய அவசரமாய்"...
யார் இவன்?

ஈழத்தில்
எம்மவர் உடல் கருக - இங்கு
இதயத்தை கருக்கிவிட்டு
இன்பத்தை தேடியலையும்
காமுகனாய்...
யார் இவன்?

நொங்கு வண்டில் சூழ்ந்து வர
குரும்பெட்டித் தேரிழுத்த
சுந்தர பூமியில்

"மனித
ரத்தமும், சதையும்
சிதறிக்கிடந்தால்தான் - எனக்கு
இங்கு
அகதி அந்தஸ்து தொடரும்"
என்கிறானே...!
யார் இவன்?

சோகங்களையே சுவாசங்களாக்கி - எமை
சுமந்த மண்ணில்
சமாதானக் காற்றின் சாயல் தெரிய
முகம் கறுத்து, விறுவிறுத்து
சமாதானம் கர்ப்பத்திலேயே கரைய
கடவுளை வேண்டுகிறானே...!
யார் இவன்?

அம்மாவும், அப்பாவும் - கூடவே
அக்காவும்
கொடுங்கோல் ஆட்சியில்
குடும்பத்தோடு முடமாக - இங்கு
குளுகுளுப்பான "குட்டி" தேடி
நாயாய் அலைகிறானே...!
யார் இவன்?

உணவின்றி உயிரிழைத்து
மார்பு வற்றிய அக்கா - குழந்தை
அழுதாலும் சட்டை திறப்பதில்லையாம் - காரணம்
தாயிடம் பாலுமில்லை

அடிக்கடி திறந்து சட்டை கிழிந்தால்
மாற்ற வழியுமில்லை - ஆனால்
அவள் தம்பி - இங்கு
இந்திய நடிகை வந்ததும்
தடவித் தடவி
தங்கக் கொலுசு கட்டி விடுகிறானே...!
யார் இவன்?

# தமிழ் அன்னை வேண்டும்!

*அன்புக்குரிய அண்ணாவுக்கு!*

*பாசறையில் யாவரும் நலமே*
*மன்னார் கடலில் நான்*
*மாண்டு விட்டதாக*
*ஒப்பாரி வைத்தீர்களாமே..!*

*ஈழத்தாயின் மானம் காக்க*
*புறப்பட்ட அன்றே - நானும்*
*'மரணத்தை வென்றவர்கள்' பட்டியலில்...*

உங்களுக்கு ''தங்கை'' வேண்டும்
எனக்கு ''அண்ணன்'' வேண்டும் - ஆனால்
எங்களுக்கு
அன்னை வேண்டும்
''தமிழ் அன்னை'' வேண்டும்!

*உங்களுக்குத் தெரியாமல்*
*பல களங்களில் - என்*
*துப்பாக்கியும் சிவந்திருக்கிறது*

*நாளை - நான்*
*மனிதக் குண்டாகி*

எதிரியின் பாசறையினுள்
சிதறினாலும் சிதறலாம்

கலங்காதே!
"என் முடிவு
விடியலுக்கான உந்துதல்"

புத்த பகவான் சிலையருகே
தமிழ்த்தாயின் குழந்தைகளை
"கொதி தாரில்"
நீந்த விட்டார்களே!
அன்று அழுதாயா?

அனுராத புரத்தில்
அரச மரத்தருகில் - தமிழர்
தலையறுத்தார்களே!
அன்று கலங்கினாயா?

மட்டக்களப்பு வாவி அருகே
சாமத்தியச் சடங்கன்றே
தமிழச்சியின் கற்பெடுத்த
சிங்க(ள)த்திற்கு
சிம்மாசனம் போட்டார்களே!
அன்று துடித்தாயா?

பிரவசத்திற்காய் சென்ற
தமிழ்த்தாய் மேலே (பிரம்படியில்)
அன்னிய அரக்கர்கள்
ஆயுத வண்டி ஏற்றி

இந்தியில்
"சுகப் பிரசவம்" என்றார்களே!
அன்று கண்ணீர் வடித்தாயா?

மண மேடையிலே
கணவனின் குருதியெடுத்து
தமிழச்சியின்
"குங்குமம்" கரைத்தார்களே!
அன்று விம்மினாயா?

கிளாலிக் கடலின்
மீன்கள் பெரு(க்)க - தமிழர்
உடல்களை சிதைக்கிறார்களே!
அதற்காக வேணும்...

இருக்காது... இருக்காது...

அண்ணா!
இனியேனும்
என்னையெண்ணி கலங்காதே!

"எம் சொந்தங்களை
விட்டு விலகுகின்றோம்
எம் சொந்த தேசம்
எமைவிட்டு விலகாமலிருக்க"

# கண்ணே! எனை மறந்து விடியலுக்கு வித்தாகு...!

தென்னங்குருத்து மரணிக்க
வீதியெங்கும்
தோரணக் குழந்தைகள்

தேசத்தின் சோகப் பிரகடனத்தை
வானுக்கு ஏற்றுமதி செய்த
ஒலிபெருக்கிகள்...

விடியலின் வித்துக்களுக்காய்
தெருவோரங்களில்
புதிதாய் முளைத்து
கண்ணீர் சிந்திய
திடீர் வாழைகள்...

புல்லின் இதழ் நுனியில்
கூடு கட்டிய
குருதித்துளிகள்...

கண்ணீர், ரத்தம், சோகம்
இவற்றினுள்

புதைந்து கிடந்த
வன்னி மண்...

மரணித்த வீரர்களுடன்
இரத்தத்தில் குளித்த
நானும் - எனது
நண்பர்களும்..

கண்ணே!
நினைவு இருக்கிறதா...?
அன்றுதான் உனக்கு நானும்
எனக்கு நீயும்
அறிமுகமானோம்

அதே கிழமை
அன்னிய இராணுவ மோதலில்
சிதைந்த காலின்
சதைகளைப் பொத்தியபடியே
தவண்டு... தவண்டு..வந்து
உன் வீட்டுத் திண்ணையில்
மயங்கிக் கிடந்தேனே...

நினைவு இருக்கிறதா...?

அன்னிய ராணுவம்
எறும்பாய் சூழ
வாழைக்குலையுடன்
என்னையும் குழியினுள் தள்ளி

வைக்கோல் போட்டுப்
புகையடிப்பதாய் நடித்தாயே..!
நினைவு இருக்கிறதா...?

அதே நான்... நான்தான்...
இன்று ஊனத்துடன்
ஐரோப்பிய நாடொன்றின்
அரசுப்பிச்சையில்
அழுந்திக் கிடக்கிறேன்.

திகைக்காதே..!
என்னைத் தேடுவதை
இன்றுடன் நிறுத்திவிடு...!

வைத்தியம் செய்ய
அயல்நாடு
வந்த நான் - என்
உறவுகளால்
மூளைச்சலவை செய்யப்பட்டு
ஐரோப்பாவிற்கு
நாடு கடத்தப்பட்டதை
நீ அறிவாய்...

நீ என் மீது கொண்ட
காதலும் நேசமும்
உண்மையெனில்
"கண்ணே எனை மறந்து
விடியலுக்கு வித்தாகு..."

இல்லையேல்
ஈழத்தாயும் என்னைப் போல்
ஊனமுற்று விடுவாள்.

விரைவில்
என்னைப் பற்றிய செய்திகள்
உன்
செவிப்பறையைச் சேதமாக்கலாம்
கலங்காதே.

# வேண்டவே வேண்டாம்

அன்புள்ள அப்பா...!
எனை விலைபேசி விற்க
வீடொன்று தேடுவதாய்
சகானா எழுதியிருந்தாள்.

வேண்டவே வேண்டாம்
எனை விலைபேச வேண்டாம்....!

மூன்று வருடமாய்
முடி உதிர்ந்து,
கை கறுத்து,
முதுமையடைந்தவனாய்
போறணைத் தணலுடன்
போராடி
உழைத்த பணத்தை
தளிம்பு மாறாக்கரங்களினால்
தானஞ்செய்த தனஞ்சயன்...

அக்காவின் வயசு
வட்டுக்குள்
வந்து விட்டது - நீ
ஆறுவருடமாய்
ஐரோப்பாவில் இருந்து
ஆகியதென்ன

போனகிழமைதான்
பக்கத்து வீட்டுப்
பங்கயத்தின் மகன்
பத்து லட்சம்
அனுப்பியிருந்தான்

இப்போதெல்லாம்
எமது மகன்
உயிரோடு இருப்பதாய் - நாம்
எண்ணுவதில்லை

பெற்றவளின் கடிதம் பார்த்து
வேலையின்றி வீதியில் அலைந்த
விபுலன்
தமக்கையின் தாலிக்காய்
தூள் கடத்தி
அன்னியச் சிறையினுள்
ஆயுட்கைதியாய்....

மகளின் திருமணத்திற்காய்
மாறிய கடன்
தீர்க்க வழியின்றி
பொலிடோலுடன் புறப்பட்டு
புதைகுழியினுள்
துயிலுற்ற பொன்னுச்சாமி...

காதலில் மூழ்கி
கருதளைத்த
தங்கையின்

தாம்பாளம் மாற்ற
தடையாய் நின்ற
தங்கத்துக்காய்
கடல் கடந்து
தனையழித்து
மொக்காடுடன்
மெழுகு திரியான
மொணிக்கா...

ஆம்...!
இவையெல்லாம்
காலம் கற்பித்த
வாழ்க்கை வடுக்கள்...

அன்புள்ள அப்பா...!
பொட்டிடும்
புண்ணியவதிக்காய் - நான்
எவரையும்
சகதியில் தள்ள
அனுமதிக்க மாட்டேன்

ஐயோ...!
வேண்டவே வேண்டாம்
விலைபேசும் திருமணம்
எனக்கு
வேண்டவே வேண்டாம்.

# அகதி!

காலத்தின் மாறுதலால்
கடந்து போன வாழ்க்கைச் சக்கரம்
கசப்பான பாடத்தினை
கருமையாய்க் கக்க....

வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு
வாழ்வதற்காய்
இருப்பிடம் தேடி - நாம்
இன்று ஐரோப்பிய வீதிகளில்
அவனியில் கேவலமானவர்களாய்...

சிதைந்து போன - எமது
தேசத்திலிருந்து வரும் சேதிகள்
கண்ணீர்த் துளிகளால்
தெருவோரச் சாக்கடையை
களங்கப் படுத்திய படியே....

தாய் மண்
அராஜகத்தால்
ஆக்கிரமிக்கப் பட்டதால்
அகதிகளாய்
இருப்பிடம் தேடி - நாம்
இன்று ஐரோப்பிய அடிமைகளாய்...

# சொர்க்க பூமி!

மூட்டை, முடிச்சு
பெட்டி, படுக்கை
பங்கர், பொம்பர்
சோகம், சோர்வு

சுதந்திரமாய்
சுவாசிக்கவாவது...

முடியாது!

மூச்சை இழுத்தால்
மூக்கை அரிக்கும்
நச்சுக் காற்று

வாடி வதங்கி
கூனிக் குறுகி
உயிரறுந்து போகும்
மானிடங்கள்
நடைப் பிணங்களாய்
நகர்ந்த படியே!

தொ(ல்)லைக் காட்சியில்
சுற்றுலா விளம்பரம் பார்த்த

ஜேர்மன் நண்பன்
"இலங்கை
ஆகா
அதுவல்லவோ
சொர்க்க பூமி" என்றான்.

நானும்
"ஆமாம்
விரைவில் சொர்க்கம் போக
அதுவல்லவோ பூமி"
என்றேன்.

# சீ... இதுவா உன் இலட்சியம்?

அன்புடன்
ந...ண்பனுக்கு!

இன்னும்
உறுதி குலையாமல்
தமிழருக்காய் பணிசெய்ய
தவமிருக்கிறாயாமே!

பாரட்டுக்கள்...

"இலட்சியம் எட்டும்வரை
கொண்ட கொள்கை
மாறமாட்டேன்...என
அடம்பிடிக்கிறாயாமே!

வாழ்த்துக்கள்...

"தமிழரின் விடுதலைக்காய்
தலையையும் கொடுப்பேன்„
என
சத்தியம் செய்த - நீ
இன்று

தமிழர் தலையெடுக்கும்
தலைமையின் கீழ்...

வேண்டாம்...வேண்டாம்...
இதுவா உன் இலட்சியம்?

நீ நல்லவன்
நானறிவேன்

உன்
முடியும், உடலும்
வற்ற வற்ற
உன்
தோழர்களின் சட்டைப்பைகள்
ஊற்றெடுப்பதை - நீ
அறிவாயா?

நாம்
சின்ன வயதில்
சிலுப்பர் கட்டடையில்
சோக்குக்கட்டியால்
சூரியன் கீற
கதறிவந்த புகையிரதம்கண்டு
காஞ்சூரம் பற்றையினுள்
குருதி குளித்தோமே!
மறந்துவிட்டாயா?

தமிழரின்
தாயகம் மீட்பதாய்

சூரியனுடன் வந்தவர்களுக்கு
கலக்கமின்றி
கை,கிழித்து
குருதித் திலகமிட்டோமே!
மறந்துவிட்டாயா?

வயற்காட்டில்
நா, வறண்ட அப்பாவுக்காய்
அன்பாய் எடுத்துச்சென்ற
சுடுநீர்ப்போத்தல்
'பட்டாம்பூச்சி புடிக்கப்போய்,
பலநூறாய் சிதறியதை...

பூமணியாச்சி கடையில்
புதுமுட்டை வாங்கி
பத்திரமாய் பையினுள் போட்டு
பாருக்குக் கீழால் சைக்கிள் ஓடி
செல்லையாக்கிழவனின் நாயில் மோதியதை...

மறந்துவிட்டாயா?
இல்லை...இல்லை...
மறந்திருக்கமாட்டாய்

நண்பா!
மன்னிக்கவும் - உனை
நண்பன்...
'நா, கூசுகிறது

இருந்தும்
நண்பர்!

காக்கைவன்னியனின்
கூட்டத்தில்
கண்மூடி இருந்தது போதும்...

அன்று
நீ கொண்ட இலட்சியம்
உண்மையெனின்
மாறிவிடு
இன்றே
மாறிவிடு
பண்டாரவன்னியன்
படையணியில்
ஓர் வீரனாக!

# எதை எழுதுவது?

எழுது எழுது என
எனை
எழுதத்தூண்டும் என்னவளுக்கு!
எதை எழுதுவது?

சோகங்களையே சுவாசங்களாக்கி
இதயம் முட்ட
இன்னல்களையும், ஏமாற்றங்களையும்
சுமந்து
நடைப்பிணமாய் அலையும்
என்னைப்பற்றி எழுதவா?

அல்லது
நான் போகுமிடமெலாம்
பூக்களாகத்தோன்றி
புன்னகைத்தவர்கள் - இன்று
முட்களாக மாறி
என்
பாதங்களில் குருதி தேடுவதைப்பற்றி...

அல்லது
பாலர் பருவத்தில்

நெருப்புப்பெட்டியில் நூல் கட்டி
தூரத் தூர நின்று
தொலைபேசியில் தொடர்பெடுத்து
"தங்கச்சி கேக்குத" எனும்
என் கேள்விக்கு
"சுத்தமா கதையண்ணா
அப்பதான் கேக்கும்"
என்ற
என் தங்கை - இன்று
சத்தமில்லாமல்
நெடுங்கேணியில்
நீராகிவிட்டதைப்பற்றி...

அல்லது
சிங்களச் சிப்பாய்களின்
சித்திரவதையால்
தினம் தினம்
உணர்விழந்து வரும் - என்
அங்கங்களைப்பற்றி...

எதை எழுதுவது???

வாழ்க்கையே சூனியமாகி,
சோகங்களைச் சுமக்கமுடியாமல்
என்
இதயம் நலிவடைவது போலவே
என்
எழுத்துக்களும்...

"சூரியன் போல வருவீங்கள்...
என்றவளே.. நான்
சுடுகாடு போகுமுன்
எழுதிப்பழகு
எனக்காகவோர்
இரங்கல் கவிதை - என்று
சொல்லமாட்டேன்

சோகங்களையும் துயரங்களையும்
துடைத்தெறிய
வாழ்க்கையின் வெற்றிக்கான
இறுதிக்கட்டப் போரில்
ஈடுபட்டிருக்கிறேன்

வெற்றிக்கான எல்லை
வெகு தூரமில்லை..
அப்பொழுது
உன் கனவுகள் நனவாகும்
என் பேனாவின் பிரகாசம்
வானைத்தொடும்
அதுவரை காத்திரு.

# நான் கண்ட
# ஐரோப்பியத் "தமிழச்சி"

"மூக்கும் வாயும்
புகை போக்கி
குளிர்ந்த விரல்களுக்குள்
கொளுத்திய சிகரெட்
பொத்தான் இருந்தும்
பூட்டாத சட்டை
தொடை தெரியும்
காற்சட்டை
தமிழை மறந்த
உதடுகள்
தமிழனைக் கண்டால்
முகத்தை மூடுவதற்காய்
தலை மயிர்
இடையை வருடும்
"வெள்ளை விரல்கள்"

பொறுக்க முடியாமல்
"தங்கச்சி நீங்கள் தமிழோ"
என்றேன்.

வெள்ளை விரல்களை
விறுக்கென்று உதறிவிட்டு
ஜா...ஜா..என்றாள்.

பக்கத்தில் இருந்தவன்
பதறாமல் சொன்னான்
"பொன்னம்மாக்காட ரெண்டாவது
இதுதான்"
நம்ப முடியவில்லை....
என்னால்
நம்ப முடியவில்லை....

மூக்கில் சளி வழிய
பனங்காய் கடித்த வாயுடன்
பல்லி முட்டாய்க்காய்
அழுதவளா இவள்?

தமிழ் மண்ணின் புழுதியில்
புரண்டு விளையாடிய
தமிழச்சியா இவள்...!?

நம்ப முடியவில்லை...
என்னால் - என்
கண்களை நம்ப முடியவில்லை....

# அவளிடமிருந்து ஒரு கடிதம்

என்னுள்ளம்
ஏகமனதாய்
ஏற்றுக்கொண்ட
இளமைக் கவிஞனே...!

உனது
பேனாவிலிருந்து கசியும்
ஒவ்வொரு துளி மையும்
ரவிவர்மனை எஞ்சிய
ஓவியங்களாய்
எனது மனதில்...

இராமனின் மனைவியால்
காவியம் படைத்தவன்
கம்பன்

தூரிகையின் கோடுகளால்
துலங்கிட்டவன்
ரவிவர்மன்

"உண்மை" என்ற
வார்த்தையால்
உயிர் பெற்றவன்
அரிச்சந்திரன்

இவற்றையெல்லாம்
அறிந்த என்னுள்ளம்
இன்னொன்றையும்
அறியத்துடிக்கிறது

ஆம்,
அது வேறொன்றுமல்ல
உன் கவிதைகளின்
கருப்பொருளைத்தான்

உன் கவிதைத் தூண்டிலில்
சிக்கி
எனதிதயம்
உனை வந்தடைய
துடிக்கும் போதெல்லாம்
நூலையல்லவா
அறுத்துவிடுகின்றாய்...!

உனது
கவிதைகள்
ஒவ்வொன்றையும் - நான்
எனது
கர்ப்பப்பையின்

கலங்களிலல்லவா
வைத்துப் பாதுகாக்கின்றேன்

என் சுவாசப்பையை
வந்தடையும்
காற்றும் - உன்
கவிதைகளைச் சொல்லி
எனைச் சுவீகாரம் செய்கிறது

என்
இதயத்துடிப்பை
எண்ணிப்பார்க்க
முயன்றேன்
முடியவில்லை...
அதுவும்
உன் பெயரைத்தான்
உச்சரிக்கிறது

தூக்குமரக் கைதியாய் - நான்
இறைவனிடம்
கேட்பதெல்லாம்
உன் இதயம்
ஒன்றுதான்

ஆனால் - நீயோ
எனை
அரவணைக்க
அருவருக்கிறாய்

ஆனால்,
ஒன்று மட்டும்
உறுதியாய்
கூறுகிறேன்...!
என்னிதயம்
துடிப்பதெல்லாம்
உனக்காகத்தான்.

# என் ஆசிய முல்லையே

வயதுக்கு வந்தும்
தாவணியறியாத
வெள்ளை றோயாவே..!

பூனைக்கண்களை
இல்லை... இல்லை....
நீல வைரங்களை
காவல் காக்க
இமைகளில்
வெள்ளைவேலி போட்ட
வெண்புறாவே..!

சோளம் பொத்தியின்
பஞ்சணையாய்
பளபளக்கும்
சூரியக்கூந்தலையுடையவளே...!
சஞ்சீவியாய் வளர்ந்து
நாணலை
இடையாக்கியவளே...!

நிலவொளியை நேசித்த
மின்மினிகளை

காதுகளில்
சிறைப்பிடித்து வைத்த
சிங்காரியே..!

பூப்பெய்திவிட்டதை
பறைசாற்ற விரும்பாத
புதுமைப்பொக்கிசமே...!

ஐரோப்பாவில் பிறந்த
என் ஆசிய முல்லையே
உன்னை நான்
நேசிக்கிறேன்
ஆனால்
உன்னை நான் காதலிக்கவில்லை

ஏனெனில் ஐரோப்பியக் குருதியில்
ஆசியக்கலாசாரத்தை
வளர்க்க முடியாது
எனவே
நான் என்னை
இழக்கத்தயாரில்லை.

# வெற்றிடம் நிரப்புக

*வீரத்தின்*
*விளைநிலத்தில்*
*மரணங்களின் தொகை*
*மங்கா வடுவாய்...*

*சோகங்களும்*
*துயரங்களும்*
*உடன்பிறப்புகளாய்....*

*காக்கை வன்னியனின்*
*வெற்றிடத்தை நிரப்ப*

*"காக்க" வன்னியரென*
*அன்னியரின்*
*அரவணைப்பில்*
*இவர்கள்*

*சோகத்தின்*
*விளைநிலத்தை*
*சுந்தரகாண்டமாக்கி*

மக்களை
அரவணைக்க
அவர்கள்

நாமெல்லாம்
சிங்கத்தின்
கோட்டைக்குள்
சிக்குண்ட மான்களாய்
பண்டார வன்னியனின்
வரவை எதிர்பார்த்தபடியே...

# சீ... தண(ல்)க் கோடரியா...?

நதி, மலை, மதம், மொழி...
ஒன்றிய இதயங்களை
ஒற்றையாக்க
என்றுமே எண்ணியதில்லை
ஒன்றைத்தவிர
ஆம்
சீ...தனம் எனும்
கரித்தணலைத்தவிர

இணைந்த
இதயங்களை
இரண்டாக்க
சீதணக்கோடரியா...?
ஐயோ!
வேண்டவே வேண்டாம்
வீசியெறியுங்கள்
சீதணக்கோடரியை
இல்லையேல்
வீழ்ந்த மலர்களுடன்
ஜோடி மலர்களாய்
நாமும்...

# அக்கினி சாட்சி

அக்கினியும்
அருந்ததியும்
ஐயர் காட்டியபின்
அவள்
மனைவியானாள்
என்னொருவனுக்கு....!

ஆனால்
ஒன்றைமட்டும்
மறந்துவிட்டாள்
ஆம்,
எம் காதலை
அக்கினிக்கு சாட்சியாக்கியதை....

நான்
அரிச்சந்திரன்
அதனால்தான்
அக்கினி
அழியாமலிருக்க
ஓமம் வளர்க்கிறேன்
''சிகரெட்டில்''

# எப்ப அனுப்பிறியள்

குற்றாளத்தின்
குளிர்ச்சியாய்
குமரியொருத்தி
என்முன்...
"எப்ப அனுப்பிறியள்"

நிமிர்ந்து பார்த்தேன்"

தாமரையில்
தள்ளாடும்
நீர்த்துளிகளாய்
கண்விழிகள்...

"எப்ப அனுப்பிறியள்"

தலையைக் குலுக்கிப் பார்த்தேன்

அம்மன் தேரில்
அசையும்
முத்துக்களாய்
காதில்
மின்னல்கள்...

''எப்ப அனுப்பிறியள்
பரிசுக்குப் போகோணும்''

மதுரையை எரிக்குமுன்
கண்ணகியாய்
இலக்கியக் கர்வம்
முகத்தில் தவழ....

''எப்ப அனுப்பிறியள்
அவர் பரிசிலை இருக்கிறார்''
கணப்பொழுதில் - நான்
எனை அடகு வைத்து
கரியான விட்டிலாய்
சொன்னேன்
''தங்கச்சி
நான் ஏஜென்சியில்லை
அவர் வெளியிலை போட்டார்''

# தேய் பிறை

போதையில் தான்
எழுதுவேன்
கவிதை - என்று
புதுமையாய்
புலம்புகிறான் - ஒரு
நண்பன்

அவளை மறக்க
அருந்துவேன் மது என
அடம் பிடிக்கிறான்
இ(எ) ன்னொரு நண்பன்

எனது இதய
அணுக்களில்
உறைந்து கிடப்பவளே....!
உன்னை
மறப்பதாய் எண்ணி - நான்
தேய்பிறையாய்...

# விடுதலை வேண்டும்

கல்லுடைத்து நீரெடுக்கும்
கவிஞரெல்லாம்
கல்லுரசி கால் தேய்ந்து
கலியுக றொபோக்களாய்
மலைமுகடுகளில்
முண்டியிட்டு
தேயிலை பறிக்கும்
மங்கையர்களை
மறந்து விட்டார்களா...?

ஐரோப்பாவில்
இளைஞர்கள்
இரண்டு வேலை செய்வதே
இன்னல்
ஆனால் இவர்கள்
"கொழுந்து பறிக்கும் றொபோக்களாய்..."
"பிள்ளை பெறும் இயந்திரங்களாய்..."
"சமையலறைத் தலைவிகளாய்..."
கங்காணியின் பார்வையில்..?

விடுதலை வேண்டும்... விடுதலை வேண்டும்....
எமக்குமுன் இவர்களுக்கு...!

# இதயமற்றவனின் அலறல்

*சிதைந்துபோன*
*இதயத்தைச் சீராக்கி*
*அதனுள்*
*குடிகொள்ளத் துடிப்பவளே...!*

*இதயமற்ற*
*மானிட விலங்கொன்றை*
*காதலித்து*
*என்ன சுகத்தை*
*காணப்போகிறாய்...?*
*வாழ்க்கையெனும்*
*நெடிய பயணத்தில்*
*தெருவோரக் கல்லொன்றை*
*காதலிக்கத் துடிக்கின்றாயே...!*

*வழி தெரியாததால்தான்*
*தெருவோரத்தில்*
*ஒதுங்கிக் கிடக்கிறேன்*
*என்பதை சிந்திக்கவில்லையா...?*

சிதைந்துபோன
இதயத்துண்டுகள் கூட
என்னிடமிருந்து
அன்னியப்பட்டது
உனக்குத் தெரியாதா...?

இதயத்துண்டுகளைத் தேடி...
சத்திரச் சிகிச்சையா...?
வேண்டாம் பெண்ணே...!
அந்த இதயம்
வேறொருவளுடையது
அதை விற்றுப்பலகாலம்
அதனால்தான் - அவள்
அதிகாரத்துடன் அதை
சிதைத்திருக்கிறாள்
ஒருமுறை
சிதைந்தது போதும்
இன்னொருமுறை
சிதைக்கவா
சிதைந்த இதயத்தை
சீராக்கத் துடிக்கிறாய்?

எனது இதயம்
மங்கையரின்
விளையாட்டுப் பொருளாக
இறைவனால்
படைக்கப்பட்டது

என்பதை நீயும்
அறிந்து விட்டாயா?
வேண்டாம் பெண்ணே..!

இதயமற்றவனிடம்
இரக்கத்தை
எதிர்பார்க்காதே..!

உனது எண்ணங்களை
பாலைவனத்தையல்ல
பசுந்தரையை நோக்கி
நகர்த்து.

# மௌனம் சம்மதமா...?

மௌனத்தாலே
சம்மதத்தை
தோற்றுவித்து
சம்மதத்தையே
மௌனமாக்கியவளே...!"

சோகத்தின் பொருளை
"மறந்துவிடு"
என்ற வார்த்தையால்
விளக்கியவளே..!

இன்னும் - ஏன்
எனது இதய
அணுக்களிலிருந்து
இறங்கிவிட
மறுக்கிறாய்..!

இல்லை... இல்லை...
உன்னை
இறக்கிவிடும் சக்தி
என்னிடம் இல்லை
அது எனது
மரணத்தில்தான்
இருக்கிறது

# தமிழ்க் கலாச்சாரத்தை தாரை வார்த்து விடாதே

கரைந்துவிட்ட
காதலுக்காய்
கலாச்சாரத்தை
கர்ப்பத்திலேயே
கரைத்துவிட்டு
கண்ணகியாகத்
துடிப்பவளே..!

மதத்தை
மதித்து
மாங்கல்யத்தின்
மகிமையை உணர்ந்து
மனநிறைவுடன் வாழு...!

சோகங்களையே
சுவாசங்களாக்கி
சுற்றங்களையே
சுழற்றி எறிந்து

சுயநினைவுகளையே
சுமைகளாக்கிக் கொண்ட - எனக்கு
உனது சுப மடல்கள்
சுவார்சியத்தைத் தராது
நிறுத்து.. நிறுத்து...
இன்றுடன் நிறுத்திவிடு...

# அற்புத றொபோ

காரிருளை
கலைக்கும்
விளக்கைக் - காதலித்து
தம்மையே
கரித்துண்டுகளாக்கிக் கொள்ளும்
விட்டில்களைப்போல்
இலக்கியத்தை
இயற்றிய
இன்பக்காதலில்
இறக்கை விரித்து
இறந்து போன
இலக்கியத்திற்காய்
இதயத்தைக் கருக்கி
"ஆஸ்ரே" முட்ட
அதன் நினைவுகளில் வாழும்
அற்புத "றொபோ"
நான்

# சிகரட் தேவதை

இதயத்துடிப்புகளை
இரட்டிக்க வைப்பவளே
புதுமைச்சுவாசமே...!

உன்னைக் காதலித்து - என்
உதடுகளுடன்
நீ ஒட்டிய நாளிலிருந்து
என் இதழ்களும்
உகண்டாதேச
உறவினர் நிறமானது

உன்
திருட்டு உள்ளத்தில்
வெண்மையைப் போர்த்தி
மனிதத்துடிப்பை
அணுவணுவாய் அரிக்கும்
அற்புதமே...!

புலரவிருக்கும்
பொழுதுகள் ஒவ்வொன்றும்
புலருமுன்...
ஆதவனைக்காணமுன்...
என் சுவாச அணுக்கள்

தேடுவதெல்லாம்
உன்னுறவைத்தான்

என்
சுவாச அணுக்களில்...
இதய அறைகளில்...
இரத்த நாளங்களில்
உறைந்து கிடப்பவளே...!

விலகிப்போ...!
எனை விட்டு
விலகிப்போ...

என் நேசத்துக்குரியவளாய்...
இதய ஒளிவிளக்காய்...
என்னுடனிருந்து - நீ
என் இதயத்திற்காய்
தந்ததெல்லாம்
ஓட்டைகளும் அரிப்புகளுமே...!

விலகிப்போ என்று
உதடுகளும் நாவும்
உச்சரிக்கும் போதெல்லாம்
உள்ளம் மட்டும்
தயங்குகிறது
என்
இதய ஓட்டைகளை
நேசம் கொட்டி

முடிமறைக்க
உயிருள்ள தேவதையொருத்தி
வரும்வரை
திண்மத்தேவதையாய்
என்னுடன்
வாழ்ந்து விட்டுச்செல்.

❁

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803